குளியாப்பிட்டி பிரதேச சபை - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குளியாப்பிட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குளியாப்பிட்டி பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 36,701,243 கடன் மீதி நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகையில் வேறுபடுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத வகையில் வேறு பிரித்துக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன் செலுத்தும் காலத்தின் அடிப்படையில் பொறுப்புக்கள் தொகுதிகளாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும்.
(ஆ)	பெறுமதி ரூபா 18,897 ஆன விடுவிக்கப்பட்ட வைப்பு மீதியொன்றும், ரூபா 335,010 ஆன வைப்புச் செய்யப்பட்ட தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் நாட்குறிப்புக்க ளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சகல கொடுக்கல் வாங்கல்களும் நிதிக்கூற்றுக்களில் சரியாக குறிப்பிடப் படல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு 34 இருப்பு விடயங்களின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 16,482 ஆன 04 இருப்பு விடயங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இருப்பு பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நூலகப் புத்தகங்கள் மற்றும்	நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள	உரிய வேறுபாடுகளை இனங்கண்டு பதிவேகளைச் சரிசெய்து

	நானாவித பிணை வைப்புக்களின் பெறுமதி ரூபா 24,198,581 ஆக இருந்த போதும் பட்டோலைகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 23,150,239 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 1,048,342 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	முரண்களான ரூபா 463,587 பெறுமதி 01 வருடத்திற்கு குறைந்த நானாவித வைப்பு மீதியாக இருந்ததுடன் அப் பெறுமதி ரூபா 457,684 ஆக சரிசெய்ய வேண்டி இருந்ததுடன் நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நூலக மட்டத்தில் சரியான தகவல்களைப் பெற்று நாளதுவரையாக பேணிச்செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	அதன் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் திசம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான வாகனங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் மற்றும் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பெறுமதிகள் முறையே ரூபா 52,013,450, ரூபா 97,010,035 மற்றும் ரூபா 82,470,000 ஆனமையால் மேற்கூறப்பட்ட 03 பெறுமதிகளுக்கும் இடையே இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	எதிர்காலத்தில் பட்டோலைகளைச் சரிசெய்து அவ்வாறான வேறுபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பட்டோலைகளை அடிப்படையாகக் கொண்டு பேரேட்டில் குறிப்பிட்டு அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை	இணங்காமைகள்	கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 38(2) ஆம் பிரிவு	நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாடு காணப்படுகின்றமைக்கும் அந்த முறைமையின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக பேணிச் செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிந்த மையையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்ற வேண்டிய எழுத்து மூல மீளாய்வின் பிரதி ஒன்று கணக்காய்வாளர்	உள்ளகக் கணக்காய்வு அறிக்கை குளியாப்பிட்டி பிரதேச சபையின் மூலம் தற்போது கணக்காய்வு அத்தியட்சகர் அலுவலகத்திற்கு அனுப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய அறிக்கைகள் எதிர்காலத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணகாய்வு அதிகாரச் சட்டத்தில் காண்பிக் கப்படுகின்ற தேவையினை நிறை வேற்றி கணக்காய்விற்கு அறிக்கையிடல் வேண்டும்.

		தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	இலங்கை சனநாயக சோஷலிக குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	நிதிப் பிரமாணம் 571(2)	பெறுமதி ரூபா 203,398 ஆன காலாவதியான 03 வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எஞ்சியுள்ள வைப்புக்களை விடுவிடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2018 திசம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 04/2018 என்ற நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கை மற்றும் கொம்றோலர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் வழிகாட்டி			
	02 ஆம் பந்தி	அரசாங்கத்தின் நிதியல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது அவற்றின் பெறுமதி சரியாக கணக்கீடு கணிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் சபையின் வாகனங்கள் தவிர ஏனைய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	காணி மற்றும் கட்டிடங்கள் தற்போதைய பெறுமதியில் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் சொத்துக்கள் பெறுமதியிடப்படல் வேண்டும்.
	3 ஆவது மற்றும் 4 ஆவது பந்திகள்	நிதியசல்லாச் சொத்துக்களை அறிக்கையிடும் போது ரூபா 5,000 அல்லது அதற்கு மேற் பட்ட பெறுமதியுடன் நிதியல் லாச் சொத்துக்கள் இனங் காண வேண்டியிருந்த போதிலும் சபையினால் ரூபா 5,000 இற்கு குறைந்த 58 காணிகள் மற்றும் கட்டிடங்கள், 24 இயந்திரங்கள் மற்றும் 85 தளபாட உபகரணங்கள் புத்தகங்களில் பேணிச் செல்லப்பட்டிருந்தது.	மேற்கூறப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பதிவேடுகள் நாளதுவரையாக்குவதற் கும் பெறுமதி ரூபா 5,000 இற்கு குறைந்த உபகரணங்களை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் சொத்துக்கள் பிதவேடு நாளதுவரையாக பேணிச்செல்லப்படல் வேண்டும்.

(ஈ) வடமேல் மாகாண நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரப் பிரிவினால் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டி 9.2 (v) ஆம் பந்தி	சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் கணக்குகள் கணக்காய்விற்காக சபை பங்குபற்றி இருக்காததுடன் சமூக அடிப்படையிலான அமைப்புக்களை பதிவு செய்ய வைத்தல் மற்றும் மேற்பார்வைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	எதிர்வரும் ஆண்டுகளில் இந்த பிரச்சினையான நிலைமையை மாற்றியமைத்து பதிவு செய்யாத சமூக அடிப்படையிலான சபைகளைப் பதிவு செய்து செயற்பாடுள்ள சமூக சபைகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சமூக அடிப்படையிலான அமைப்புக்களை ஒழுங்குபடுத்தி செயற்படுத்துதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 50,862,167 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,217,456 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	3,802	4,459	4,875	403	3,751	4,032	3,234	789
ii.	வாடகை	10,497	14,527	14,365	142	11,871	10,887	10,885	2
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,275	944	944	-	1,163	1,316	1,316	-
iv.	ஏனைய வருமானம்	245,076	120,821	78,605	138,529	131,201	265,057	265,057	-
	மொத்தம்	260,650	140,751	98,789	139,074	147,986	281,292	280,492	791

2.2.2 வருமான சேகரிகத்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் சிட்றையிடப்பட்ட வருமானத்தில் கடந்த ஆண்டில் இறுதில் நிலுவை வருமானம் சேர்க்கப்பட்டு சேகரிக்கப்பட்ட வருமானம் கழிக்கப்பட்ட பின்னர் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் பெறப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் நிலுவை வருமானம் மற்றும் இந்தத் தொகைகளுக்கிடையே பரஸ்பர வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	மீளாய்வாண்டில் ஆதனவரி மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானத்திற்குரிய ஏக்கர் மற்றும் ஆதனவரி சிட்டையிடல் பதிவேடு மற்றும் கணக்குகளின் பிரகாரம் சமமாக இருக்க வேண்டி யிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டில் நிலுவைக் கணக்குகளின் பிரகாரம் 798 ஆக சரிசெய்ய வேண்டியிருந் ததுடன் ஆவணங்களின் பிரகாரம் நிலுவை 796 ஆகும். அதன் பிரகாரம் ஆவணங்களை சமர்ப்படுத்துதல் மற்றும் கணக்குகளில் பற்றாக்குறையாக இருந்ததுடன் ரூபா 1,848 பரஸ்பர வேறுபாடு காணப்பட்டது.	சரியான கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ரூபா 0.7 மில்லியனான நிலுவை வருமானம் மற்றும் ரூபா 141 மில்லியனான ஆண்டின் சிட்டையிடல்களின் கூட்டுத் தொகையில் ரூபா 401 மில்லியன் அறவிடப்பட்டதுடன் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 139 மில்லியன் மேலும் நிலுவையாக காணப்பட்டது.	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 139 மில்லியனான மொத்த நிலுவையில் தற்போது ரூபா 57.9 மில்லியன் அறவிடப்பட் டுள்ளது.	நிலுவை வருமானம் மற்றும் சிட்டையிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**வீதி வரியும் வரியும்**		
(i)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 159,232 ஆதன வரி மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 143,464 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,768 அறவிடப்படாமல் காணப்பட்டது. இந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை.	சிவப்பு அறிவித்தல் விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதுடன் அவ்வாறு நிலுவை செலுத்தாத நபர்களுக்காக ஆதனங்களைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப் படல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் காணப்பட்ட ரூபா 243,967 நிலுவை ஏக்கர் வரி மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 61,675 மற்றும் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைய மீதி ரூபா 182,292 அறவிடப்படாமல் காணப்பட்டது.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கும் தேவையற்ற சிட்டையிடப்பட்ட தொகைகளை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப் படல் வேண்டும்.

(ஈ)	**வாடகை** மீளாய்வாண்டின் திசம்பர் 31இல் உள்ளவாறு நிலுவைக் கடை வாடகை ரூபா 143,407 அறவிட வேண்டிக் காணப்பட்டது.	2025 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும்.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப் படல் வேண்டும்.
(உ)	**ஏனைய வருமானம்** மாகாண சபையின் பிரதம செயலாளரிடமி ருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடமி ருந்தும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 8,184,882 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 130,270,369 அறவிடப்பட்டிருக்க வில்லை.	மிகுதிப் பணத்தை அறவிடுவதற்காக மீண்டும் கோரிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்று வதற்காக உப விதிகள் விதிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் உப விதிகள் தயாரித்து அங்கீகரித்து கொள்ளப்பட்டிருக்க வில்லை. ஒரு அங்கீகரிக் கப்பட்ட உப விதியொன்றைப் பின்பற்றப்பட்டப் பட்டிருந்ததுடன் அந்த உபவிதியும் செயற்படு நிலையில் காணப்படவில்லை.	மாகாண சபையின் மூலம் விதிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் யாவும் எமது சபையினால் பின்பற்றப்படு வதுடன் நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது தேவையான சட்ட ரீதயான ஏற்பாடுகள் இந்த உப விதிகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது.	உப விதிகளை விதித்து சபையின் நடவடிக்கைகளை முறைப்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	ஆண்டில் உக்குகின்ற கழிவுப் பொருள் 845 தொன் சேகரிக்கப்பட்டதுடன் அதனை பயன்படுத்தி கரைசல் உரம் லீற்றர் 1450 உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 29,005 வருமானம் உழைக்கப்பட்டி ருந்தது. உற்காத கழிவுப் பொருட்கள் கிலோ கிராம் 10,959 விற்பனையில் ரூபா 270,935 வருமானம் உழைக்கப்பட்டிருந்தது.	புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மேம்படுத்தல் மூலம் புதை படிவ எரிபொருள் எரிவினைக் குறைப்பதற்கு பங்களித்தல் மற்றும் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களை முறையற்ற தீர்வுகளை இயலுமான வரை குறைத்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் உலகளாவில வெப்பத்தை குறைப்பதற்கு அது சார்ந்த பங்ளிப்பினை வழங்குதலை விரிவுபடுத்துதல் நோக்கமாக	கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறைப்படுத்தி மக்களுக்கு சிறந்த சூழலொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	இருந்ததுடன் அதன் மூலம் நிதி ரீதியான பெறுமதியை விஞ்சுகின்ற நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்தது.	

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 09 கணக்கு மீதிகள் ரூபா 149,861,689 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 149,660,815 மற்றும் 05 வருடங்களை விட பழைய மீதி ரூபா 198,090 ஆக காணப்பட்டது. அந்தத் தொகையினை விரைவாக அறவிடுவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.	நிதியினை அறவிடுவதற்காக மீண்டும் கோரிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 42,928,583 ஆக இருந்ததுடன் அதில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் கிடையிலான காலத்திற்குரிய ரூபா 42,808,927 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 119,005 பழைய மீதி காணப்பட்டது. அவ்வற்றின் இருப்பு தொடர்பான ஆபத்துக்களைத் தீர்த்து வைப்பதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் செலுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பினைக் கண்டறிந்து தீர்த்து கணக்குளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	காணிப் பதிவேட்டின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான மொத்தக் காணி அலகுகள் 263 இல் உரித்துறுதியுள்ள வரைபடம் இல்லாத காணி அலகுகள் 91 காணப்படுகின்றமை மற்றும் சபைக்குச் சொந்தமான காணிகளின் எல்லையை இனங்கண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந் தமையும் அவதானிக்கப்பட்டது.	2024 இல் மேற்கொள்ளப் பட்ட காணியை மெய்மை ஆய்வின் அடிப்படையில் மொத்தக் அளவில் வரைபடம் இல்லாத 91 காணிகள் காணப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது. சபையில் காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நில வரைபடத்தை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.	காணிகளின் எல்லைகளை இனங்கண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	தளபாடம், அலுவலக உபகரணம், இயந்திர பொறி முறைகள், கணனி மற்றும் கணனி மென்பொருளுக் கான பதிவேடு பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை.	தற்போது அதற்கான தனித்தனியான பொருட் பதிவேடு புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றது.	நிலையான சொத்துக்களுக்காக தனித்தனியான பதிவேடுகள் பராமரித்து நாளதுவரையாகப் பேணிச்செல்லப்படல் வேண்டும்.

(உ)	சபைக்குச் சொந்தமான சபைக்குரிய ஒரு வங்கி நடைமுறைக் கணக்கில் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 64,014,036 மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த நிதியை ஏக்கபூர்வமான முதலீட்டில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது சபையில் நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 மே 02 ஆம் திகத ரூபா 10 மில்லியன் மற்றும் 2025 மே 20 ஆந் திகதி ரூபா 20 மில்லியன் நிலையான வைப்புக்கள் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	மிகை நிதியினை ஆக்கபூர்வமாக முதலீடு செய்வதற்கோ அல்லது சபையின் நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுமதி ரூபா 2,500,000 ஆன பல்லேவெல நூலக கட்டிடம் மற்றும் மாரப்பிட்டியவத்த விழா மண்டபம் என்பன 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.	போதியளவான நூலகங்களின் எண்ணிக்கை ஒன்று சபையில் உள்ளமையினால் பல்லேவலையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அரச அல்லது தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு வதுடன் மாறப்பிட்டியவத்தையில் அரைப்பகுதி நிர்மாணிக் கப்பட்டுள்ள கட்டிடத்தை மீளமைத்தல் பயனற்றதாக இருந்தமையால் உள்ளூராட்சித் திணைக் களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	விளைவற்றுக் காணப்படுகின்ற சொத்துக்களை ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சபையின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குரிய ஜீப் வண்டி சபைக்குக் கிடைத்த திகதி அல்லது கிடைத்த முறை தொடர்பான எழுத்துமூல தகவல்கள் சபையிடம் காணப்படாதிருந்ததுடன் சபையினால் இந்த வண்டிக்குரியதாக பேணிச் செல்லப்படுகின்ற சம்பவத் திரட்டுப் புத்தகத்தின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு முதல் வாகனம் பயன்படுத்தப்படுகின்றமை வெளிப்படுத் தப்பட்டது. இதுவரையில் இவ் வண்டியை மிகவும் உடைந்த நிலையில் காணப்படுவதுடன் பழுதுபார்ப்பதற்கோ அல்லது பயன்படுத்த முடியாதாயின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஜீப் வண்டியின் மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழ் கண்டறியப்பட்டுள்ளதுடன் அது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், குருணாகல் ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. அது தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு சென்று அது தொடர்பாக விசாரணை செய்து இறுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்தினைக் கையேற்று பொருத்தமான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கித்தலவ வாராந்த சந்தை மற்றும் கித்தலவ நூலகம் அமைந்துள்ள காணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.	கித்தளவ நூலகம் அமைந்துள்ள காணியை கையேற்பதற்காக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	காணியினைக் கையேற்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) சபையில் பௌதீக ரீதியில் காணப்படுகின்ற சகல சொத்துக்கள் தொடர்பாகவும் மெய்வு ஆய்வு மேற் கொண்டு அவற்றைப் பதிவேடுகளில் உள்ளடக்கிய நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 439,055,797 ஆன நிலையான சொத்துக்களுக்கான பட்டோலைகள் அல்லது நிலையான சொத்துப் பதிவேடுகள் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது.	2024 இல் மேற்கொள்ளப்பட்ட மெய்மை ஆய்வின் அடிப்படையில் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப் படுகின்றது.	பரீட்சித்து உரிய வேறுபாடுகளை இனங்கண்டு பதிவேகளை சரிசெய்து அதன் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும்.

3.5 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டாம் நிலைக்குரிய 14 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலைக்குரிய 02 பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. இரண்டாம் நிலைக்குரிய 53 பதவிகள் மற்றும் ஆரம்பநிலைக்குரிய 27 பதவிகள் மிகையாக காணப்பட்டது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியினை விஞ்சி அமய அடிப்படையில் ஒரு ஊழியரும் சேர்க்கப்பட்டிருந்தார்.	வேலைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் 52 அபிவிருத்தி உத்தியோகத் தர்களின் காரணமாக இரண்டாம் நிலையில் மிகையின் 53 ஆக இருந்ததுடன் தற்போது 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றலாகிச் சென்றமையால் மிகைகளின் எண்ணிக்கை 46 ஆக இருந்தது.	வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கும், மிகை பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ) பெறுமதி ரூபா 11,205,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்ட 05 வேலைகள் மற்றும் 24 நிகழச்சித்திட்டங்கள் நிறைவேற்றப்படா திருந்ததுடன் வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாத ரூபா 456,665 ஆன 02 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது.	2024 இன் பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் பல்வேறு காரணங்களினால் அந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	திட்டமிடப்பட்ட முறையில் வேலைகள் நிறைவேற்றி நிதியினை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) பெறுமதி ரூபா 4,025,000 மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை ஒதுக்கி திட்டமிடப்பட்டிருந்த 24 நிகழ்ச்சித் திட்டங்களின் செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தைவிட குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது.	பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதும் அதன் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான சந்தர்ப்பம் காணப்பட்டது. எதிர்காலத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை குறித்துரைத்த ஆண்டு முடிவடைவதற்கு முன் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட நிகழ்சித் திட்டங்களை அமுல்படுத்தி மக்களுக்கு நல்ல சேவையினை வழங்குதல் வேண்டும்.

4.2 பாதீட்டு கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சரியான எதிர்வுகூறல் இன்றி பாதீட்டு மதிப்பீடு தயாரித்ததன் காரணமாக மீளாய்வாண்டில் 04 வருமான விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 17 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும், 08 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 52 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்களும் அவதானிக்கப்பட்டது.	சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை கவனத்திற்கொண்டு சரியான முகாமைத்துவத்துடனும், சரியான எதிர்வுகூறலுடனும் பாதீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதற்காக விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	சரியான பிரகாரம் எதிர்வுகூறி மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 14,330,000 நிதி ஏற்பாடு ஒதுக்கி திட்டமிடப்பட்டிருந்த 34 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் ஆண்டின் போது எந்தவொரு நிதிசார் செயல் முன்னேற்றமும் பெறப்பட்டிருக்க வில்லை.	2024 இன் பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் நேரடியாக நிதி ஏற்பாடு வழங்கப்படாமை, நலன்புரி செலவினத்தைக் குறைத்தல், சில நிகழ்ச்சித்திட்டங்கள் நன்கொடை மற்றும் உதவியின் கீழ் நிறைவேற்றுதல், ஆளுநரின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அங்கீகாரம் கிடைக்காமை போன்ற காரணங்களினால் அந்த நோக்கங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்த முடியாதிருந்தது.	நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.